**நவகத்தேகம பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 24 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் நவகத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினுள் நவகத்தேகம பொது நூலகத்தில் சிறுவர் பிரிவை பகுதிகளாக வேறுபடுத்துவதற்கு செலவான ரூபா 102,490 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பூடாக சரி செய்துள்ளதாக தயவாய் அறிவிக்கிறேன். |
| (ii) | நீர் சுத்திகரிப்பு மத்திய நிலையிலிருந்து அகற்றப்பட்ட பொருள்களை பயன்படுத்தி புதிதாக தயாரிக்கப்பட்ட 03 மேசைகள் மற்றும் 04 இராக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மூலதனமாக்கியிருக்கவில்லை. | பெறுமதியை மதிப்பிட்டு மூலதனமாக்க வேண்டும். | பெறுமதியை மதிப்பிடுவதற்கு குழுவொன்றை நியமித்து அக்குழுவின் பரிந்துரை மீது அப் பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) 2019 திசெம்பர் 31 திகதியன்று சபைக்கு பெற வேண்டிய 21 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 10,316,629 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் ரூபா 95,058 ஆனது. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 2014 கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 08 வேலைகளுக்குரியதாக மேலும் பெற வேண்டியதாகவுள்ள ரூபா 95,058 அறவிடல் தொடர்பாக எழுத்துமூல கோரிக்கை செய்துள்ளதாக தயவாய் அறிவிக்கிறேன். ஏனைய பெற வெண்டிய பெறுமதியில் ரூபா 1,676,943 மேலும் பெற வேண்டியதாக உள்ளது என அறிவிக்கிறேன். |
| (ii) 2019 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,645,702 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 95,082 ஆனது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2014 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் கருத்திட்டத்தின் கீழான வேலைகளிற்காக செலுத்த வேண்டிய ரூபா 95,082 தொகையை செலுத்த முடியாது போனது அதற்காக ஒதுக்கீட நிடைக்காததால் என தயவாய் அறிவிக்கிறேன். ஏனைய செலுத்த வேண்டிய கடன்கொடுனர் ரூபா 1,127,348 மேலும் காணப்படுவதாக அறிவிக்கிறேன். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததனால் கூட்டுத்தொகை ரூபா 76,436,378 ஆன 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக நடாத்தப்பட வேண்டும். | தளபாடம் மற்றும் பொருத்திகள் பதிவேடு தயாரித்துள்ளதாக அறிவிப்பதுடன் அதிலுள்ள குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். பி.ச.46 படிவம் பிரகாரம் காணி மற்றும் கட்டிட பதிவேட்டை தயாரித்துள்ளதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணங்காமை

பின் வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | | |
| 127 பிரிவு. | சுடலைகள் மற்றும் மையவாடி அதிகார சட்டத்தின் 03 பிரிவின் செயற்பாடுகளிற்காக அனைத்து பிரதேச சபைக்ளும் தமது எல்லையினுள் உரிய பொறுப்பாளரான போதும் அதிகார எல்லையில் 23 சுடலைகளை சபைக்கு சுவீகரித்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சுடலைகளை விரைவாக சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான 23 சுடலைகளை சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தயவாய் அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்<br>--------------------------- | | | |
| (i) | 5(3) விதி | வருமானங்களை சேர்த்தல் தொடர்பாக உள்ளக பரிசோதனை ஒன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | உள்ளக பரிசோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். | வருமானம் சேகரித்தல் தொடர்பாக உள்ளக பரிசோரனை ஒன்றை மேற்கொள்வதாக தயவுடன் அறவிக்கிறேன். |
| (ii) | 5(7) விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக சம்பூரண காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கணக்காய்வறிக்கை கணக்காய்வாளரிற்கு அனுப்ப வேண்டும். | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக சம்பூரண காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ள முடியாதிருந்ததாக ஏற்றுக் கொள்வதுடன் 2020 ஆண்டில் அதனை சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,759,111 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,753,151 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 554 | 685 | 696 | 10 | 386 | 488 | 467 | 21 |
| ii | வாடகை | 5,440 | 4,738 | 4,750 | 10 | 1,699 | 4,052 | 4,031 | 22 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 187 | 180 | 180 | - | 149 | 208 | 208 | - |
| iv | ஏனைய வருமானம | 6,506 | 4,282 | 5,145 | 390 | 3,188 | 2,312 | 1,059 | 1,253 |
| | | 12,687 | 9,885 | 10,771 | 410 | 5,422 | 7,060 | 5,765 | 1,296 |

சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டின் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தளப்பரப்பு கற்கள் கருத்திட்டதிலிருந்து பெற வெண்டிய ரூபா 389,912 யினை அறவிட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தளப்பரப்பு கற்கள் கருத்திட்டதிலிருந்து பெற வேண்டிய ரூபா 389,912 இனை தற்போது குறுக்கு பதிவுகள் ஊடாக அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற்கொள்ள உப விதிகள் விதிக்க வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 திகதி வரை 15 விடயங்களிற்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நவகத்தேகம பிரதேச சபையினால் செயற்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட்ட உப விதிகளையாகும். ஏனைய துறைகளிற்கு பிரதேச சபையினால் உப விதிகளை விதித்துக் கொள்ள வேண்டிய போதும் அதற்காக சபையினால் உப விதிகளை தயாரிக்கும் போது ஏற்படும் சட்ட ரீதியான பலவீனம் காரணமாக விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெறும் போது சிக்கல் ஏற்படுவதால் பிரதேச சபையினாளேயே தயாரித்து அங்கீகரித்துள்ள உப விதிகள் இல்லை என தயவுடன் அறிவிக்கிறேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆண்டில் சபைக்கு சுவீகரித்துக் கொண்ட காணியொன்றிற்கு நகரில் ஒன்று சேர்க்கும் கழிவுகள் வெளியிடப்பட்டிருந்தன. | ஒழுங்கான முறையில் கழிவுகளை வெளியடல் வேண்டும். | சந்தனன்குலம காணி திண்மக் கழிவு மத்திய நிலையமொன்றை நிர்மாணக்க ஒதுக்கப்பட்டு தற்போது அந் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுவததுடன் எதிர் காலத்தில் ஒழுங்கான முறையில் கழிவுகளை வெளியிட நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி | | |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சி நிரல் 2030” பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கான ஆயத்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | சபையினால் 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக 23 இலக்குகளை இனங்கண்டு அந் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ள பல செயற்பாடுகளை செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியில் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | நகரின் நீர் வழிந்தோடும் நிரந்தர கால்வாயை 02 கிலோமீட்டர்கள் வரை விரிவுபடுத்தல், பொது நூலகத்திற்காக இணைய வசதிகளை பெற்றுக் கொடுத்தல், அதிகார எல்லையில் 02 நூலகங்களை நிர்மாணித்தல் எனும் கருத்திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ள போதும் 2019 ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படாததால் ஆண்டினுள் குறித்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை | திட்டமிட்ட நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் 2020 – 2030 கால எல்லையில் அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு குறிப்பிடப்படும் இலக்குகள் கட்டங்களாக எதர்வரும் 10 ஆண்டுகளில் செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நவகத்தேகம நகர எல்லையில் வருமானம் சேகரிக்கக் கூடிய மட்டத்திற்கு வசதிகள் முன்னேறயுள்ளதால் குறித்த பிரதேசங்களை இனங்கண்டு | வீத வரி விதித்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீத வரி அறவிடுவதற்குரியதாக தற்போது குறித்த பிரதேசங்களை வர்தமாணியில் பிரசுறித்துள்ளதுடன் மதிப்பீட்டு திணைக்கள உதவியுடன் ஆதன மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | வரிபடத்திற்குட்படுத்தி குறித்த பிரதேசத்தை பரிசோதித்தல் மற்றும் வாடகை ஆதனங்களை இனங்காணப்பட்ட போதும் ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | முடிவுற்றுள்ளது. அதன் பிரகாரம் ஆதன வருடாந்த பெறுமதி கிடைத்த பின்னர் 2021 ஆண்டிலிருந்து வீத வரி விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | சபையினால் ஆண்டினுள் வருமான மேம்படுத்தல் வேலைத் திட்ட நடைமுறைப்படுத்தல் அல்லது புதிய வருமான உருவாக்கம் பற்றி கவனம் செலுத்தியிருக்கவில்லை. | புதிய வருமான உருவாக்க அறிக்கை பற்றி கவனம் செலுத்த வேண்டும். | 2019 ஆண்டு வீத வரி கட்டணம் விதித்தல் மற்றும் உள்ளக தளப்பரப்புக் கல் உற்பத்திப் பணிகள் விஷேட வருமான உருவாக்க வேலைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டன. |
| (இ) | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 05 கட்டிடங்களிற்குரிய காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | பேரூந்து தரிப்பிட மேல் மாடியை டென்டர் வழங்க 03 சந்தர்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் எந்த ஒரு மணுதாரரும் முன்வராததால் பொருளாதார ரீதியான நன்மைகளை சபைக்கு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | கட்டிடத்தை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூன்று சந்தர்பங்களில் பேரூந்து தரிப்பிட மேல் மாடியை குத்தகை வழங்க மணு கோரியதுடன் அதில் ஒரு சந்தர்ப்பத்தில் திறந்த மணுக் கோரல் செய்யப்பட்டது. எனினும் எந்த மணுதாரரும் அதற்காக முன்வரவில்லை. அதன் பிரகாரம் 20,000 ரூபாவான வருடாந்த பெறுமதியை திருத்தித் தருமாறு மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (உ) | 2017 ஆண்டு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பொது வியாபார கட்டிடத் தொகுதியின் மேல் மாடி 02 கடையறைகளிற்கு 2020 மே 20 திகதிவரையும் மின்சாரம் பெற்றிறுக்கவில்லை. | விரைவில் மின்சாரத்தை பெற்று குறித்த கடையறைகளை குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது வியாபார கட்டிடத் தொகுதியின் மேல் மாடி 02 கடையறைகளிற்கு 2020 ஆண்டு மின்சாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவி வெற்றிடமாகவுள்ள சபையின் செயலாளர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இரண்டாம் தரத்திலான 04 பதவிகளும் முதலாம் தரத்திலான 02 பதவிகளும் வெற்றிடங்களாக உள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயலாளர் பதவி மற்றும் இரண்டாம் தர பதவிகளிற்கான ஆட்சேர்ப்பு பொது சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கிறேன். அதே போன்றே ஆரம்ப தர பதவிகளிற்காக வரிதமாணியில் பிரசுறித்து விண்ணப்பம் கோரிய போதும் தகைமையுள்ளவர்கள் முன்வராததால் வெற்றிடமாக காணப்பட்டன. |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 325,000 ஆன இரு சொத்துக்கள் பல வருடங்களாக விளைவற்ற நிலையில் காணப்பட்டன. | ஒழுங்கு முறையாக சான்றிதழை பெற்று விளைவற்ற சொத்துகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணமல் போயுள்ள இலக்கம் 159-0891 கொண்ட மோடார் சைக்கிலின் பதிவு சான்றிதழின் பிரதி பெற்றுக் கொண்ட பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்வதுடன் RW-0695 கொண்ட நீர் பவுசரின் மதிப்பீடு கிடைத்த பின்னர் முன் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நவகத்தேகம போருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள வியாபார கட்டிடத் தொகுதியை நவீனமயமாக்க 2017 ஆண்டின் நிதி ஏற்பாட்டின் மீது 2017 ஒக்டோபர் 13 இல் ஆரம்பித்து 2017 திசெம்பர் 28 காலத்தினுள் | உடன்படிக்கை பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நவகத்தேகம போருந்து தரிப்பிட வியாபார கட்டிடத் தொகுதியின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டைக் |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட வேண்டுமென உடன்படிக்கை செய்திருந்த போதும் உடன்படிக்கை பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்படாது, சில வேலை விடயங்களை மாத்திரம் பூர்த்தி செய்து ரூபா 1,925,281 கொடுப்பனவு செய்யப்பட்டிருநதது. பூர்த்தி செய்யப்பட்ட பகுதிகள் பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் காணப்படாததுடன் கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள 2018, 2019 ஆண்டுகளில் ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததால் 2020 மே 20 திகதியன்றும் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | கோரி முன்மொழிவொன்று சமர்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆண்டினுள் அதற்காக ஒதுக்கீடு கிடைக்காததுடன் 2019 ஆண்டிற்காக மீண்டும் ஒதுக்கீட்டை கோரியுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்திருந்ததுடன், 2019 ஆண்டில் சபையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | சபையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். | உள்ள கணக்காய்வு மேற்கொள்ளும் அலுவலரினால் ஏனைய கடமைகளையும் மேற்கொள்வதன் காரணமாக 2019 ஆண்டில் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காவ்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். அதனால் அதனை சரிசெய்து கொள்ள 2020 ஆண்டில் உள்ள கணக்காவு நடவடிக்கைகளிற்காக வேறு ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |